## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்

## DVC. No.4/2025

## PW-2

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி.தேவகி, Grade III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் 2 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 16 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். திருமதி.சிவகாமி<br>வயது. | நாள் 16.06.2026 |
| க/பெ. திரு.திருப்பதி | தொழில் |
| கிராமம் | வட்டம், |

ம.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

இந்த வழக்கில் நான் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை,**

மனுதாரர் என்னுடைய மகள் என்றால் சரிதான். மனுதாருக்கும், எதிர்மனுதாரருக்கும் எந்த தேதியில், எந்த மாதத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் 14.09.2020 முண்டககன்னியம்மன் கோயிலில் 7.00 மணியளவில் திருமணம் நடந்தது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 திருமண

அழைப்பிதழில் உள்ள திருமண தேதி சரியா என்றால் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள தேதி தான் சரி.

2. திருமண அழைப்பிதழ் வழக்குக்காக தனியாக அச்சிடப்பட்டது என்றாலும் ம.சா.ஆ.6 ஆவணம் என்னால் தான் தயாரிக்கப்பட்டது என்றால் திருமண தேதி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே திருமணத்திற்கு திருமண அழைப்பிதழ் அச்சிட்டோம் என்றால் மாப்பிள்ளை வீட்டார் தான் தயார் செய்தார். என் மகளுக்கு திருமண சீர்வரிசையாக எத்தனை சவரன் நகைகள் சீர்வரிசையாக கொடுத்தேன் என்றால் ஆரம் 3 சவரன், நெக்லஸ் 2 சவரன், மாப்பிள்ளைக்கு 2 சவரன் செயின், அரைசவரன் மோதிரம், மகளுக்கு கால் சவரன் மோதிரம் ஒன்று, ஒரு கிராமம் மோதிரம் ஒன்று, தாலி 1 சவரன், காலுக்கு 1/4 கொலுசு.

3. நகைகளை நான் எந்த கடையில் வாங்கினேன் என்றால் கல்பாக்கத்தில் வாங்கினேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரருக்கு இருசக்கர வாகனம் சீர்வரிசையாக கொடுத்தேனா என்றால் ஸ்கூட்டி வாங்கி கொடுத்தேன். யார் பெயரில் வண்டி வாங்கி கொடுத்தேன் என்றால் என் மகள் பெயரில் வாங்கி கொடுத்தேன். எந்த கம்பெனி என்றால் கம்பெனி பெயர் தெரியாது, ஆனால் மதுராந்தகத்தில் சுபம் மோட்டார்ஸ்சில் தான் வண்டி எடுத்தேன்.

4. வண்டியின் ஆர்.சி.புக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் வண்டி வாங்கி கொடுத்தது மட்டும் தான் தெரியும், மற்ற விவரங்கள் எனக்கு

தெரியாது. என் மகள் எதிர்மனுதாரருடன் எந்த தேதியில் சண்டை போட்டு என் வீட்டிற்கு வந்தார் என்றால் ஜீன் மாதத்தில் தான் என் வீட்டிற்கு வந்தார். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் யார் பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் அவர்கள் தான் என்னிடம் வந்து பெண் கேட்டார். பழிவாங்குவதற்காக தான் கல்யாணம் செய்து கொண்டார்கள் என்றால் அவர்களுக்குள் எனக்கும் ஏற்கனவே பகை இருந்தது அந்த பகையை மறந்துவிட்டு தான் திருமணம் செய்து கொடுத்தேன்.

5. எந்த இடத்தில் திருமண பிரச்சனை நடந்தது என்றால் புளியந்தோப்பில் நடந்தது. புளியந்தோப்பில் என்னுடைய மகளும், மருமகனும் தனியாக வாடகை வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். என் மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். பிறந்த நாள் விழாவில் எதிர்மனுதாரர்கள் வீட்டில் எல்லா செலவுகளையும் செய்தார்கள் என்றால் எனக்கு சொல்லவில்லை. என் மகள் கர்ப்பமாக இருக்கும்போது உடல் அளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக எனக்கு எப்போது தெரிவித்தார்கள் என்றால் 3 மாதத்திற்கு பிறகு தான் எனக்கு சொன்னார்கள்.

6. தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியாது. என் மகளை கொடுமைப்படுத்தியதாகவும் எனக்கு தெரிந்தவுடன் நான் நேரிடையாக சென்று பார்த்தேனா என்றால் நேரில் போய் நான் கேட்டேன். நான் நேரிடையாக கேட்டபோது அங்கு யார் இருந்தார்கள் என்றால் சோபனா, மற்றும் சில உறவினர்கள் இருந்தார்கள். அவர்களை சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. என் மகள் மேல்மருவத்தூர் அனைத்து

மகளிர் காவல் நிலையத்தில் எந்த தேதி, மாதம், வருடத்தில் புகார் கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை.

7. புகார் சம்பந்தமாக விசாரணை மற்றும் மேல்நடவடிக்கை எடுத்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பட்டார் என்றாலும் மனுதாரர் எதிர்மனுதார்களை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ அழைத்தார் என்றால் இல்லை நான் துணி மற்றும் பேக்கை எடுத்துக்கொண்டு சென்றேன். எந்த கலர் பேக்கை எடுத்துக்கொண்டு சென்றேன் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் இல்லை. நான் வழக்குக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போட்ட சீர்வரிசை நகைகளை என் மகள் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்தார் என்று சொன்னால் இல்லை. அதை மறைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. மேல்மருவத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் மீது மேல்நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அந்த புகார் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரருக்கு 3 வருடம் போன் பண்ணி எடுக்கவில்லை என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் மகள் கொடுத்த புகார் மீது உண்மை தன்மை இல்லை என்று காவல் நிலையத்தில் முடித்து வைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. மனுதாரர் என்னுடைய சொந்த மகள் என்பதால் அவளுக்கு பவ்வியப்பட்டு பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
DM Cum JM
Cheyyur